செ.வெ.எண். 64 நாள். 23.09.2017

# வனத்துறை சார்பில் வன உயிரின வாரவிழா போட்டிகள்

வன உயிரின வார விழா, வன உயிரினங்கள் மற்றும் அவைகளின் வாழ்விடங்களை பாதுகாப்பது குறித்து பொதுமக்களிடம் மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வன உயிரினங்களை பாதுகாப்பதில் அவர்களின் பங்கு என்ன என்பதை அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2-ந்தேதி முதல் 8-ம் தேதி வரை கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த விழாவானது அகிம்சையையும், இரக்க குணத்தையும் போதித்த தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்களின் பிறந்த தேதியான அக்டோபர் 2-ந் தேதி முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

2017-ம் ஆண்டு வன உயிரின விழா போட்டிகள் (ஓவியப்போட்டி, கட்டுரைப்போட்டி) திருநெல்வேலி கோட்டத்தில் நடத்தப்படவுள்ளது. எல்.கே.ஜி. வகுப்புகள் முதல் கல்லூரி வரை கீழ்க்கண்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும்.

**ஓவியப்போட்டி**

பிரிவு A – எல்.கே.ஜி. முதல் முதல் வகுப்பு

பிரிவு B - இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு

பிரிவு C - ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு

பிரிவு D - ஒன்பதாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு

பிரிவு E – கல்லூரி மாணவர்கள்

பிரிவு F – மாற்று திறனாளி மாணவர்கள் (A, B, C, D and E மாணவர்கள்)

**பேச்சுப்போட்டி**

பிரிவு D, E, F (ஒன்பதாம் வகுப்பு முதல் கல்லூரி மாணவர்கள்)

**தலைப்பு:**

*ஆங்கிலம்:* **"People's Participation in Wildlife Conservation"**

*தமிழ்:* **"வனஉயிரினங்களின் பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பு"**
*(பேச வேண்டிய நேரம் 3 நிமிடம்)*

மேற்கண்ட போட்டிகள் 26.09.2017 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் கிறிஸ்துராஜா மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை (கிருஷ்ணா ஆஸ்பத்திரி எதிரில்) வைத்து நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும், முதல் மூன்று இடங்களில் வரும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பரிசுகள் வழங்கப்படும். பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டியில் முதல் பரிசு பெறும் மாணவர்கள் சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் பங்கு பெறுவார்கள். மேலும் விவரங்களுக்கு மாவட்ட வன அலுவலக தொலைபேசி எண் 0462

2553005.,திரு.R.கந்தசாமி, தொழில் நுட்ப உதவியாளர், மாவட்ட வன அலுவலகம் தொலைபேசி எண் 7871730001 என்ற எண்ணுக்கும் தொடர்பு கொண்டு விவரங்களை பெறலாம் என மாவட்ட வன அலுவலர் திரு.த.சம்பத், இ.வ.ப. தெரிவித்துள்ளார்.

22/9/17

மாவட்ட வன அலுவலருக்காக
திருநெல்வேலி வனக்கோட்டம்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி